வருடாந்த செயலாற்றுகை அறிக்கை



2022

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு


செயலாற்றுகை அறிக்கை-2022

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

2022 ஆண்டிற்கான செலவுத்தலைப்புடன் தொடர்புபட்ட நிதி செயலாற்றுகை அறிக்கை பக்கம் 28-35 இல் அடங்கும்

	பொது நிர்வாகப்பிரிவு	உள்நாட்டலுவல்கள் பிரிவு	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப்பிரிவு
	சுதந்திர சதுர்க்கம், கொழும்பு 07, இலங்கை	"நில மெதுர" எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிட்ட கொழும்பு 05 இலங்கை	இல. 330, டாக்டர். கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்தை (யூனியன் பிளேஸ்), கொழும்பு - 02, இலங்கை
	011-2696211/13, 011- 2166000	011 - 2050450	011 – 2 305326 / 327, 2303280
	011–2695279	011 - 2551071	011 - 2 699 720
	information@pubad.gov.lk	info@moha.gov.lk	info@pclg.gov.lk
	www.pubad.gov.lk	www.moha.gov.lk	www.mpclg.gov.lk

கௌரவ அமைச்சரின் ஆசிச்செய்தி



பெருந்தொகையான சவால்களுக்கு மத்தியில் ஒரு நாடு என்ற வகையில் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து மக்கள் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்காக அயராது முயற்சி செய்த ஒரு ஆண்டாக 2022 ஆம் ஆண்டைக் குறிப்பிட முடியும். பல்வேறுபட்ட பாரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக ஒரு அரசாங்கம் என்ற வகையில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்ட ஒரு ஆண்டாகும் என கடந்த வருடத்தைக் குறிப்பிடுவதும் பொருத்தமானதாகும். அந்தத் தீர்மானங்களின் சிறந்த பெறுபேறுகளை ஒரு நாடு என்ற வகையில் இன்று நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

அந்தச் சவால்மிக்க இலக்கை அடைவதற்காக நாமும் கிராமிய புனர்வாழ்வு மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான ஒருங்கிணைந்த பல்துறை நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்து இந்தச் சவால்மிக்க சந்தர்ப்பத்தில் தனது பொறுப்புச் சட்டகத்திற்கு அப்பால் சென்று பணியை நிறைவேற்றியதை இங்கு குறிப்பிடுவது பொறுத்தமாகும்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்ற வகையில் பெருமளவான துறைகளில் பரந்துள்ள நிரல் அமைச்சின் கீழ், பொது மக்களுக்கான சேவைகளை இலகுபடுத்தும் நோக்கிலேயே உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சு என இரண்டு இராஜாங்க அமைச்சுக்கள் நிறுவப்பட்டுள்ளன. அரசகரும மொழி திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், இலங்கை உள்ளூராட்சி நிறுவனம், அரசகரும மொழிகள் ஆணைக்குழு, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை, தொலைக் கல்வி நிலையம், அரச சேவை பரஸ்பர நலவுதவிச் சங்கம் ஆகிய நிறுவனங்கள் வருடத்தில் தமது பொறுப்புக்களை மிகச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு வழங்கிய பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

எவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுத்த போதிலும், தரமான அரச சேவையினைப் பேணி வருவதற்கான பதவியுயர்வு முறைகள் 2022 ஆம் ஆண்டில் எமது அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் திறன் விருத்தி நிகழ்ச்சிகளில் புலப்படத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களுக்குச் செல்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை ஒரு முக்கிய அம்சமாகும். மேலும் பிராந்திய நிர்வாகத்தைப் பலப்படுத்துவதற்கான பல்வேறு நிகழ்ச்சிகளும் உள்ளூராட்சித் துறையின் மேம்பாட்டுக்கான நிகழ்ச்சிகளும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு ஆண்டாக சென்ற வருடத்தைக் குறிப்பிட முடியும்.

இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இந்த அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சர்கள், செயலாளர், ஊழியர் குழாம், நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த ஊழியர் குழாத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன்.

தினேஷ் குணவர்தன,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம மந்திரி,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அவர்களின் செய்தி



2021.02.16 முதல், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சானது தனி அமைச்சகமாக செயல்பட்டு வந்த்து. இந்த அமைச்சகமானது மே 27, 2022 முதல், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என பெயர் மாறியுள்ளது. இந்த அமைச்சகத்தின் கீழ், உள்நாட்டலுவல்கள் அமைச்சகம் தற்போது இராஜாங்க அமைச்சகமாக செயல்பட்டுவருகின்றது.

புதிய அரசியலமைப்பு திருத்தங்கள், மாவட்ட மற்றும் ஆளுகை நிர்வாகத்தை செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் நடைமுறைப்படுத்துவற்கான திட்டங்களை உருவாக்குவற்கான பிரதான பொறுப்பும் இந்த அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலுடன், மனித வள திறனை அதிகரிப்பதுடன் தொழிநுட்ப வசதிகளையும் பெற்றுக்கொடுத்து கிராமிய மட்டம் வரையில் மிகச் சிறந்த முகாமைத்துவத்தை மேற்கொள்கிறது.

எவ்வாறாயினும், சமர்ப்பிக்கும் இந்த அறிக்கையானது பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2022 ஆம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கையின் சுருக்கமாகும்.

இந்த செயல்திறன் அறிக்கையானது உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து அதை ஒரு நாடாக மாற்றியமைப்பதில் அப்போதைய இராஜாங்க அமைச்சகம் மேற்கொண்ட அபிவிருத்தி முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.

எமது அரசாங்கம் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னரே, வெளிப்படையான மற்றும் செயலூக்கமான பொது நிர்வாக கட்டமைப்பைக் கொண்ட அரசு வேண்டும் என்பது மக்களின் கோரிக்கைகளும் அபிலாஷைகளும் ஆகும். அதற்கு 'அரச ஊழியரின்' பொறுப்பு மிகவும் முக்கியமானது. அதற்கமைய, பொறுப்புள்ள நாட்டை உருவாக்குவதற்காக இந்த அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அரச ஊழியர்களின் பொறிமுறையில் செயலாற்றுகை ,பொறுப்பும் பொறுப்புக்கூறலும் கொண்ட செயலூக்கமான நிர்வாகத்தை கொண்ட நாட்டை உருவாக்குவதற்கு மிகவும் முக்கியமானது.

இந்த முன்னேற்ற அறிக்கையானது தேசிய மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த ஒட்டுமொத்த முயற்சியின் விளைவாகவும்,செயற்திறனை பகுப்பாய்வு ரீதியாக நோக்கும் போது, அன்றைய அமைச்சினால் ஏற்பட்ட முன்னேற்றம் மக்களுக்கு கிடைத்த வெற்றி என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகின்றேன். எதிர்காலத்தில் தமது வாழ்வாதாரங்களை சரி செய்வதில் இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை நீக்கி வளமான நாட்டை கட்டியெழுப்ப உதவுவதற்கு இந்த அமைச்சு இந்த ஆண்டிலும், வரவிருக்கும் ஆண்டுகளிலும் தொடர்ந்து பெரும் முன்னேற்றங்களை மேற்கொள்ளும் என்பதை அனைவருக்கும் நினைவூட்ட விரும்புகிறோம்.

அசோக பிரியந்த (பா.அ)
உள்நாட்டலுவல்கள் இராஜங்க அமைச்சர்

மாகாண சபை சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



பொது மக்களுக்கு தமது வாழ் நாளில் தேவைப்படும் அத்தியவசிய சேவைகளை வழங்குவதனைப் போன்று வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் அனைத்து உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கும் விஷேட செயற்பாடுகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதனை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன் பொது மக்களுக்கு சேவைகள் வழங்கப்படுவதனைப் போன்று உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கும் வருமானம் மற்றும் சொத்துக்கள் என்ற தொனிப்பொருள் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

கோட்ட முறையின் கீழ் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு தெரிவாகும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளைப் போன்று பொது மக்களினதும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கான வழிகாட்டல்கள் தொடர்பாக எமது உள்ளூராட்சி மன்றம் தொடர்பான இலங்கை நிறுவகத்தினால் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றமை மகிழ்ச்சிற்குரிய விடயமாகும்.

அனைத்து உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்காகவும் எதிர்வரும் ஆண்டில் குறுகிய கால மற்றும் இடைக்கால அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதற்கும் ஏனைய அமைச்சுக்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளையும் உள்ளூராட்சி மன்றங்கள்

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்காகவும் எதிர்வரும் ஆண்டில் குறுகிய கால மற்றும் இடைக்கால அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதற்கும் ஏனைய அமைச்சுக்கள் மூலம் மேற்கொள்ளும் பணிகளையும் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை வலுப்படுத்தி பிரதேசத்தில் காணப்படும் தேவைகளை ஆநேகமாக மேற்கொள்ளக் கூடிய வகையில் அமுல்படுத்தக் கூடிய வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்கப்படுகின்றது.எமது அமைச்சின் கீழ் வெளிநாட்டு நிதியம் சாந்த பல செயற்திட்டங்கள் நிருவகிக்கப்படுவதனால் அதன் மூலம் 100% பெறுகளை நாட்டு மக்களுக்கு வழங்குவது எனது எதிர்பார்ப்பாகும்.

தற்போது வகுக்கப்பட்டுள்ள திட்டங்களை தொடர்ந்தும் கண்டறிந்து விரிவான மீளாய்வுகள் ஊடாக மக்களின் அத்தியவசிய சேவைகளை வழங்குதல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகளை எதிர்வரும் ஆண்டுகளில் அமுல்படுத்துவதற்கு பொறுப்புடன் செயற்படுவது எனது கடமையாகும்.

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் கழிவகற்றும் செயற்பாடுகளை முறையாக அமுல்படுத்தி கழிவற்ற சூழல் மற்றும் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ளப்படுவதனை தொடர்ந்தும் அமுல்படுத்துவற்காக அனைத்து உள்ளூராட்சி மன்றங்களை பொறுப்புடன் ஈடுபடுத்துவது எனது எதிர்ப்பாகும்.

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து எழுத்து மூல செயற்பாடுகளையும் டிஜிடல்மயப்படுத்துதன் மூலம் மிகுந்த வினைத்திறன் மிக்க சேவையினை வழங்கக் கூடிய வகையில் இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்துடன் இணைந்து எமது அமைச்சின் முழுமையான தலையீட்டின் கீழ் 100 உள்ளூராட்சி மன்றங்களை முதல் கட்டத்தில் டிஜிடல்மயப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்ககப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் பாரிய குறைபாடாக காணப்படும் தீயணைக்கும் அலகினை தாபிக்கும் செயற்பாடுகளை கட்டம் கட்டமாக மேற்கொள்வதற்காக எதிர்வரும் காலங்களில் அப் பிரிவினை கூட்டிணைத்து தீயணைக்கும் சேவைத் திணைக்களத்தினை எமது அமைச்சின் கீழ் தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமையினால் அதற்கு அமையாக இது குறித்து எனது தீவிர கவனத்தை ஈர்க்க செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் கீழ் காணப்படும் ஒழுங்குவிதிகளின் கீழ் ஆரம்ப பாடசாலைகள் மற்றும் பகல் காப்பு மத்திய நிலையங்களை சம காலத்திற்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்யும் செயயற்பாடுகளை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்வதற்கும், உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மற்றும் சமய தளங்களுக்கு இடையே நல்லிணக்த்தை விருத்தி செய்வதற்கும் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதும் அத்தியவசிய தேவையாக காணப்படுகின்றது.

மக்களின் வாழ்வாதாரத்தைப் போன்று உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் வருமானத்தை விருத்தி செய்வதற்கு உற்பத்திக் கிராம வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும், தனிப்பட்ட, பொது அரச இணைப்பினை கட்டியெழுப்பி எமது அமைச்சின் அனைத்து செயற்பாடுகளையும் வெற்றிகாரமாக அமுல்படுத்துவதற்காக அமைச்சின் செயலாளர் உட்பட அனைத்து ஊழியர்களும் எனக்கு வழங்கும் ஒத்துழைப்புக்களை பெரிதும் பாராட்டுகிறேன்.

ஜானக வக்கும்புர

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர்

<u>பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் ஆசிச் செய்தி</u>



நாடளாவிய சேவைகள் மற்றும் இணைந்த சேவைகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த அரச சேவையிலும் திறன் விருத்தியை ஏற்படுத்தி நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி பொது மக்களுக்கு உன்னதமான சேவையினை தேசிய, மாகாண, பிரதேச மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக வழங்குவது இந்த அமைச்சின் முன்னுரிமச் செயற்பாடாகும். எனினும், கடந்த சில வருடங்களாக நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக உலகின் அனைத்து நாடுகளையும் போன்று இலங்கையிலும் அரச மற்றும் தனியார் துறைகள் கடுமையான பின்னடைவை எதிர்நோக்கியமை அனைவரும் அறிந்ததே. அதன் தொடர்ச்சியாக ஏற்றுமதி குறைவடைந்தமை,டொலர் கையிருப்பு குறைந்தமை, ரூபாவின் பெறுமதி குறைவடைந்தமை, பணவீக்கம் அதிகரித்தமை, நிர்மாணத் துறை வீழ்ச்சியடைந்தமை, தொழில்களை இழந்தமை, ஆட்சேர்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டமை போன்ற சவால்களுக்கு அரசாங்கம் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதன் விளைவாக மூலதனச் செலவினங்களையும் அரச செலவினங்களையும் குறைத்து கடுமையான நிதி முகாமைத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டி ஏற்பட்டது. அத்தகைய கொள்கைச் சட்டகத்தினுள் இந்த அமைச்சின் பணிகள் அரச கொள்கைகளுக்கு இணங்க முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்குபடுத்தி நிகழ்ச்சிகள் 2022 ஆம் ஆண்டில் நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அதற்கிணங்க அரசாங்க முதலீட்டு மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் அபிவிருத்திச் செயற்திட்டங்கள், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சமூக உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், சிரேஷ்ட பிரசைகளுக்கான ஓய்வூதியங்களைத் தொடர்ச்சியாகச் செலுத்துதல், அவர்களின் பொருளாதாரத்தையும் நலனோம்பலையும் மேம்படுத்துதல், பாராளுமன்றம் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலும் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல், மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களின் நலனுக்காகச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாகப் செய்தல், உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல், என்பன மேற்கொள்ளப்பட்ட முன்னுரிமைச் செயற்பாடுகளில் சிலவாகும். மேலும் 2022 ஆம் ஆண்டிற்காக பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளும் நிதிகளும் பயனுறுதிவாய்ந்ததாகவும் வினைத்திறனுடனும் வருடத்தின் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அமைச்சின் மேற்குறித்த பணியைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்கிய கௌரவ பிரதம மந்திரி மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்களுக்கும், இராஜாங்க அமைச்சர்கள் இருவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளைச் சிறப்பாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மேலதிக செயலாளர்கள், பணிப்பாளர் நாயகங்கள், சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள், பணிப்பாளர்கள், பிரதான நிதி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த ஊழியர் குழாத்திற்கும், இந்த அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட ஊழியர் குழாத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்காலச் செயற்பாடுகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு உங்கள் அர்ப்பணிப்பையும் பங்களிப்பையும் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதுடன் 2022 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கைக்கும் கணக்கு அறிக்கைக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கே.டி.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பொது
நிர்வாகப்பிரிவு

உள்ளடக்கம்

*	கொளரவ அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் ஆசிச் செய்தி	i
*	கொளரவ அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களின் ஆசிச் செய்தி	ii
01	**நிறுவனஞ்சார் விபரத் திரட்டு**	
1.1	அறிமுகம்	1-2
1.2	தொலைநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள், உபாயங்கள்	3-5
1.3	பிரதான செயற்பாடுகள்	6
1.4	நிறுவனக் கட்டமைப்பு	7
1.5	அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்	8
02	**முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு**	
2.1	2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்	9-34
03	**வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**	
3.1	நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்றுகள்	35
3.2	கட்டு நிதி சீராக்கக் கணக்கு	36
3.3	நிதி நிலைமை தொடர்பான அறிக்கை	37
3.4	காசுப் பாய்ச்சல் தொடர்பான கூற்று	38
3.5	நிதி அறிக்கை குறிப்புகள்	39
3.6	வருமானச் சேகரிப்பு தொடர்பான செயலாற்றுகை	40
3.7	ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றுகை	41
3.8	நிதி அல்லாத சொத்து அறிக்கையிடலின் செயலாற்றுகை	42
3.9	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ((கார்ய அறிக்கையின் இறுதிக்கு அமுணா எத.)	
04	**செயலாற்றுகைக் குறிகாட்டிகள்**	
4.1	செயற்பாட்டுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனஞ்சார் செயலாற்றுகைக் குறிகாட்டி செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய செயலாற்றுகைக் குறிகாட்டி (பிரிவு ரீதியாக)	43-44
06	**மனித வளத் திட்டம்**	
6.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2022	45-52
6.3	பணியாட்தொகுதியினரின் திறன் விருத்தி	53-58
07	**இணக்கப்பாட்டு அறிக்கை**	59-67

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அறிமுகம்

2022 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் திகதி முதல் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என பெயரிடப்பட்டாலும், ஆரம்பம் முதல் தற்சமயம் வரை அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அரச ஊழியர்களின் முன்னேற்றத்திற்காக மிகுந்த அர்ப்பணிப்புடனும் பொறுப்புடனும் செயற்பட்டு வருகின்ற இந்த அமைச்சுக்கு அதன் வரலாறு 84 ஆண்டு காலம் வரை நீண்டுள்ளது. 1931 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிதியமைச்சின் கீழ் திணைக்களமாக இருந்த இந்த அமைச்சு 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசாங்கத்தின் சீர்திருத்தங்களின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களின் கீழ் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி தற்போது அரச நிர்வாகத்தின் சிறந்த பணியில் ஈடுபட்டு வருகின்றது.

2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆந் திகதியிலிருந்து பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்ற பெயரில் கௌரவ பிரதமரும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சருமான தினேஷ் குணவர்தன அவர்களின் தலைமையின் கீழ் புதியதொரு அமைச்சாக கட்டியெழுப்பப்பட்டது.

'அரச ஊழியர்களின் மககெதர' ஆக விளங்கும் இந்த அமைச்சு, அனைத்து அரச ஊழியர்களினதும் தேவைகளை வழிநடத்துவதோடு, அரச சேவைக்கு தேவையான கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்கி, "சுபீட்சத்தின் தொலைநோக்கு" என்ற கொள்கைப் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை அடைவதற்கு மிகுந்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதோடு, அதற்காக அவசியப்படும் பணியாட்தொகுதியினருக்கு தலைமைத்துவத்தை வழங்கும் பொறுப்பினை அமைச்சின் செயலாளராக விளங்கும் நீல் பண்டார ஹபுகின்ன அவர்கள் குறையின்றி மேற்கொண்டு வந்துள்ளார்.


பொதுமக்களுக்கு திருப்திகரமான அரச சேவையை வழங்குவதனை சான்றுப்படுத்தும் வகையில் நியாயத் தன்மை, ஒருமைப்பாடு மற்றும் வினைத்திறனின்பால் விஷேட கவனம் செலுத்தி நிர்வாக ஏற்பாடுகள் மற்றும் சட்ட விதிகளை தயாரித்தல் இவ்வமைச்சின் மீதுள்ள அடிப்படைப் பொறுப்பாகும். அதற்கிணங்க தாபன விதிக்கோவை மற்றும் அதனுடன் தொடர்புடைய பொது நிர்வாக சுற்றரிக்கைகளை தயாரித்தல், திருத்தியமைத்தல், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அதனுடைன் தொடர்புடைய அவதானங்களை பெற்றுக் கொடுக்கும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றது. அரசாங்க நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய

மட்டத்தில் கொள்கைகளை தயாரித்தல், பொருள்கோடல் மற்றும் அதனுடன் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல் என்பன இவ்வமைச்சின் மூலம் நிறைவேற்றப்படும் மற்றுமொரு அதிவிஷேட பணியாகும். அதனூடாக மிகவும் உற்பத்திதிறன் வாய்ந்த சேவையொன்றினை பெற்றுக் கொடுக்க முடியுமான வகையில் ஒட்டுமொத்த அரச சேவையினதும் செயற்பாடுகளை கட்டியெழுப்பும் நடவடிக்கை இந்த நிர்வாகத்தினூடாக இடம்பெறுகின்றது.

தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நாடளாவிய ரீதியான சேவைகளின் தொழிற்பாடுகள் ஒட்டுமொத்த இணைந்த சேவைகளின் நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றி அரச சேவையினுள் மனித வளத்தை உயர் உற்பத்தித்திறன் மிக்கதாக முகாமைத்துவம் செய்வதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் கீழ் தயாரிக்கப்பட்ட பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2022 ஆண்டு செயல்திறன் அறிக்கை மற்றும் கணக்குகள் இதன்மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுஅரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு



விடயப் பரப்பெல்லை

சகல அரச சேவையிலும் முழுமையான இயலளவு விருத்திகளை மேற்கொண்டு நவீன தகவல் தொழில்நுட்ப மூலோபாயங்கள் ஊடாக செயற்பாடுகளின் இரட்டிப்புத் தன்மையைத் தடுத்து சேவைப் பெறுநர்களுக்கு அதிசிறந்த சேவைகளை வழங்குதல் மற்றும் மாகாண மற்றும் பிரதேச மட்டத்தில் நிலவுகின்ற வேறுபாடுகளைக் குறைத்து மக்களுக்கு உயர் சேவையை உறுதிப்படுத்தல்.

நோக்கம்

- அரச சேவையின் மனித வள முகாமைத்துவக் கொள்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்தல், ஊதியம் மற்றும் ஏனைய சேவை நிபந்தனைகளுடன் தொடர்புடைய பயனுள்ள அரச கொள்கைகளைத் தயாரித்தல்.
- பொது மக்களின் தேவைகளுக்காக மறுமொழி வழங்கும் போது தற்போது அரசாங்க சேவையில் கடமையாற்றும் அலுவலர்களின் அபிலாசைகளுக்கு புதிய பாதையினை நோக்கி வழிநடாத்துகின்றது.
- அரசாங்க சேவையின் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்காக புதிய முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.

- பிரதான அமைப்பொன்றினை நிறுவி பரிமாறிக் கொள்ளல் (முடிவினை இலக்காகக் கொண்ட மனப்பாங்கு, பொறுப்புக்கூறல், வளங்களை சிறந்த முறையில் கையாளுதல், சார்புத் தன்மையற்ற, தூர நோக்கு போன்றன)
- அரச துறையில் வேண்டி நிற்கும் பயிற்சித் தேவைகளை இனங்காணல் மற்றும் பயிற்சி திட்டங்களுக்கு வசதிகளை வழங்குதல்.
- ஓய்வுதியத்துக்கு உரியதான சிக்கல்களை தீர்த்து வைப்பதற்காக ஓய்வூதிய நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.
- அரசின் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் முன்னுரிமைகளை பூர்த்தி செய்யும் இயலுமையுடன் கூடிய அரசாங்கப் பிரிவின் நிறுவாக விருத்திக்கான கட்டமைப்பினை தயாரித்துக் கொள்ளல்.
- சேவை வழங்களின் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை கட்டியெழுப்புவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தினை கையாள்வதை மேம்படுத்தல்..
- அரச சேவையின் பணியாட் தொகுதியினரின் செயற்திறன்களை விருத்தி செய்தல்.
- மாற்றமுறும் நிலைமைகளுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வேண்டி முறைமைகளை எளிதாக்குதல் மற்றும் செயலாக்கத்தினை மீண்டும் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை மேம்படுத்தல், விருத்தி செய்தல் மற்றும் செயலுருப்படுத்துதல்.

மூலோபாயங்கள்

- அரச சேவையின் வினைத்திறனினை சிறந்த வகையில் வள முகாமைத்துவத்துக்கான பகுத்தறிவுடன் கூடிய கொள்கை மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பு
- அரச சேவையினை வழங்கும் போது உற்பத்தித்திறனினை மேம்படுத்துவதன் பொருட்டு செயலாக்கத்தினை மீண்டும் தோற்றுவித்தல் மற்றும் அமைப்பு ரீதியான விருத்திக்கான நிர்வாக சீர்திருத்தம்.
- அரச சேவைக்கான போட்டித் தன்மை ரீதியான ஆட்சேர்ப்புக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கும் செயல்முறைகள்.
- கோரிக்கை சார்புடைய இயலுமை விருத்தி மற்றும் திறன்களை ஒப்பிடல்
- சேவை வழங்கலினை பொது மக்களுக்கு அண்மிக்கச் செய்தல் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனம் சார் வலையமைப்பு.
- அரசாங்க சேவையின் தரத்தினை உயர்த்துதல் மற்றும் சேவை வழங்கலின் வெளிப்படைத் தன்மைக்காக தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல்.

- பொதுமக்களை மையப்படுத்திய அரசாங்க சேவையின் பால் சார்ந்த சேவை வழங்கலினை தரமிக்கதாக மாற்றுவதற்காக குடிமகன் / சேவைப் பெறுநர் பட்டயம்




<u>பிரதான செயற்பாடுகள்</u>

1. அரசினூடாக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் தேசிய கொள்கைகளின் மீது அமைந்துள்ள "நாட்டிற்கான வேலைக் கலாசாரம்" இனை ஏற்படுத்தும் வகையில் குறித்த இராஜாங்க அமைச்சுக்களுக்கான கொள்கை ரீதியான வழிகாட்டல்களை மேற்கொள்ளல் மற்றும் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்துக்கு உரித்தான கொள்கைகளை வகுத்தல், தேசிய வரவுசெலவுத் திட்டம், அரச முதலீட்டு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழமைந்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அமைச்சுக்குரிய திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் விடயங்கள் மற்றும் பணிகளுடன் அவற்றுடன் தொடர்பான கொள்கைகளைத் தொகுத்தல், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை, இலங்கை தகவல் தொழில்நுட்பச் சேவை மற்றும் இணைந்த சேவைகளின் தாபன, நிர்வாக மற்றும் ஆளணி முகாமைத்துவம்

3. பாராளுமன்றத்துடன் தொடர்பான மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரசினால் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகள்

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
நிறுவனக் கட்டமைப்பு



அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்

திணைக்களம்

- .ஓய்வூதியத் திணைக்களம்
- அரசகரும மொழிகள் திணைக்களம்

பல்நோக்கு மேம்பாட்டு பணிக்குழு

நிறுவனங்கள்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

தொலைக்கல்வி நிலையம்

தேசிய மொழிக் கற்கை மற்றும் பயிற்சி நிறுவனம்

தேசிய மொழிப் பிரிவு

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை

2022 இன் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்

2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிகழ்வுகள்

2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆந் திகதியிலிருந்து பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்ற பெயரில் கௌரவ பிரதமரும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சருமான தினேஷ் குணவர்தன அவர்களின் தலைமையின் கீழ் புதியதொரு அமைச்சாக கட்டியெழுப்பப்பட்டது.

- **ஆட்சேர்ப்புக்கள்**

நாடளாவிய சேவைகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2022 ஆம் ஆண்டில் 97 உத்தியோகத்தர்கள் அரச சேவையினுள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.



நாடளாவிய சேவைகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2022 ஆம் ஆண்டில் 49053 உத்தியோகத்தர்கள் அரச சேவையினுள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.



இலங்கை நிர்வாக சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	406	388	18	-
I	1010	621	389	-
II/III	1902	1565	337	-
மொத்தம்	3318	2574	744	-

இலங்கை கணக்காளர் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	93	68	25	-
I	502	614	-	112
II/III	1551	962	477	-
மொத்தம்	2146	1644	502	112

இலங்கை பொறியியலாளர் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	52	28	25	-
I	249	296	-	47
II	114	286	-	172
III	1150	662	488	-
மொத்தம்	1565	1272	513	219

இலங்கை திட்டமிடல் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	52	28	25	-
I	249	296	-	47
II/III	114	286	-	172
III	1150	662	488	-
மொத்தம்	1565	1272	513	219

இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	01	01	-	-
I	06	04	02	-
II/III	69	38	31	-
மொத்தம்	76	43	33	-

இலங்கை விஞ்ஞான சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான பதவியணி	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	21	13	08	-
I	56	27	29	-
II	17	12	05	-
,II/III	527	337	190	
III	34	18	16	-
மொத்தம்	655	407	248	-

- **2022 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று இணைந்த சேவையின் உத்தியோகத்தர்கள்.**

சேவை	**அங்கீகரிக்கப்பட்ட**	சேவையில் உள்ளவர்கள்	**வெற்றிடங்கள்**
அரச முகாமைத்துவ சேவை	**29785**	**24133**	**5652**
மொழிபெயர்ப்பாளர் சேவை	**636**	**244**	**392**
நூலகர் சேவை	**625**	**113**	**512**
அலுவலக உதவியாளர் சேவை	**17218**	**17330**	**2092**
சாரதிச் சேவை	**7002**	**8381**	**-**
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை	**3288**	**1762**	**1531**
அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை	**85585**	**82000**	**3585**
மொத்தம்	**144139**	**133963**	**13764**

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை

	சுற்றறிக்கை இலக்கம்	**வெளியிடப்பட்ட திகதி**	**விடயம்**	**குறிப்பு**
01	01/2022	2022.01.24	தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை மீளமைத்து வெளியிடப்பட்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகள் 2021	-
02	02/2022	2022.01.06	அரசாங்க உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு பெறச்செய்யும் வயதை 65 வயது வரை நீடித்தல்	2022 வரவுசெலவுத் திட்ட உரையின் வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு 5.4.11 மற்றும் 21/2270/315/040 ஆம் இலக்க 2021.12.30 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம்

03	03/2022	2022.01.13	அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.5000/- மாதாந்த கொடுப்பனவை வழங்குதல்	2022.01.03 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம்
04	04/2022	2022.03.08	மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துதல்	2022.03.07 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம்
05	05/2022	2022.03.28	2022 றமழான் (ராமசான்) காலத்தில் விசேட விடுமுறை	-
	சுற்றறிக்கை இலக்கம்	**வெளியிடப்பட்ட திகதி**	**விடயம்**	**குறிப்பு**
06	06/2022	2022.04.08	சர்வதேச போட்டியொன்றில் நடுவராக பங்கேற்க விடுமுறை வழங்குதல்	தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12.5 ஆம் உப பிரிவு
07	07/2022	2022.04.07	அரசாங்க அலுவலகங்களுக்கு 02 நாள் விசேட விடுமுறை பிரகடனப்படுத்துதல்	-
08	08/2022	2022.04.29	அரசாங்க அலுவலகங்களுக்கு விசேட விடுமுறை தினமொன்றைப் பிரகடனப்படுத்துதல்	-
09	09/2022	2022.05.19	2022.05.20 ஆந் திகதி அரச உத்தியோகத்தர்கள் கடமைக்கு	-
10	10/2022	2022.05.25	தற்போதுள்ள வளப் பற்றாக்குறையின் அடிப்படையில் அரச செலவுகளைக் குறைப்பதற்காக அரச நிறுவனங்களில் ஊழியர்களை சேவைக்கு	2022.03.08 ஆம் திகதிய 04/2022 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை

11	11/2022	2022.06.01	அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை வருமானம், 20.02.01.01 என்னும் வருமானக் குறியீட்டிற்கான 2023 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடு	அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2015.07.20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் அதற்கான திருத்தங்கள்
12	12/2022	2022.06.01	அரசாங்க கட்டிடங்களின் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை "20.02.01.01" தொடர்பான வருமான நிலுவை அறிக்கை சமர்ப்பித்தல் – 2022.06.30	அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2015.07.20 ஆம் திகதிய 01/2015
13	13/2022	2022.06.10	அரசாங்க அலுவலகங்களுக்கு விசேட விடுமுறை தினமொன்றைப் பிரகடனப்படுத்துதல்	-
14	14/2022	2022.06.22	சேவை மூப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பில்லாத வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு/ வெளிநாட்டு சம்பளமற்ற லீவு வழங்குதல்	2022.06.13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானம்
	சுற்றறிக்கை இலக்கம்	**வெளியிடப்பட்ட திகதி**	**விடயம்**	**குறிப்பு**
15	15/2022	2022.06.15	அரச உத்தியோகத்தர்கள் ஒரு நாள் வீட்டிலிருந்து விவசாய மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட	2022.06.13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானம்
16	16/2022	2022.06.17	அரச அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை வரவழைப்பதை மட்டுப்படுத்துதல்	2022.06.15 ஆம் திகதிய 15/2022 ஆம் இலக்க அரசாங்க

17	17/2022	2022.09.08	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சிறப்பு வகுப்பிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம் – 2023	அரச சேவை ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட செயலொழுங்கு விதிகள் (தொகுதி இல. 1) இன் XVIII
18	18/2022	2022.09.09	தாபனவிதிக் கோவையின் I ஆம் தொகுதியின் XII ஆம் அத்தியாயத்தின் பிரிவுகளில் திருத்தங்கள் செய்தல்	தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1, 6, 8, 10 மற்றும் 21 ஆம் பிரிவுகள்
19	19/2022	2022.09.14	அரச உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆகக் குறைத்தல்	2022.08.30 ஆம் திகதிய வரவுசெலவுத் திட்ட உரை, 2022 ஆம் ஆண்டில் அரச துறை மறுசீரமைப்புக்களின் கீழான 11:2 ஆம் முன்மொழிவு, 2022.09.12 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானம், 2010.09.30 ஆம் திகதிய 19/2010 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி. 2018.02.20 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை

	சுற்றறிக்கை இலக்கம்	**வெளியிடப்பட்ட திகதி**	**விடயம்**	**குறிப்பு**
20	20/2022	2022.09.15	பொது நிருவாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் பொதுச் சேவை உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதற்குப் பொருத்தமான பதவிநிலை உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்கள்	2017.12.07 ஆம் திகதிய 32/2017 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
21	21/2022	2022.09.23	கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக பதவியணிக்காக அரசாங்க சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களைத் தற்காலிகமாக இணைத்தல்	-
22	22/2022	2022.11.25	இலங்கை நிர்வாக சேவை உத்தயோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறை 2023 (I, II மற்றும் III ஆந் தரங்கள்)	අමප/11/1090/523/087 ஆம் இலக்க 2011.05.11 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் අමප/14/0286/523/007 ஆம் இலக்க 2014.04.23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம்

23	23/2022	2022.12.28	1620/22 இலக்கத்தடைய 2009.09.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட அரசாங்க நூலகர் சேவைப் பிரமாணத்தின்படி	1620/22 ஆம் இலக்க 2009.09.24 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலக்கம் நூலகர் சேவைப்
24	24/2022	2022.11.25	இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறை - 2023	-
25	25/2022	2022.11.25	இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறை - 2023 (I, II மற்றும் III ஆந் தரங்கள்)	-
	சுற்றறிக்கை இலக்கம்	**வெளியிடப்பட்ட திகதி**	**விடயம்**	**குறிப்பு**
26	26/2022	2022.11.30	அரசாங்க உத்தியோகத்தர்களின் உடை	1989.02.01 ஆம் திகதிய 8/89 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் 2022.11.28 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானம்
27	27/2022	2022.12.08	அரசாங்க கட்டிடங்களின் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை "20.02.01.01" தொடர்பான வருமான நிலுவை அறிக்கை சமர்ப்பித்தல் – 2022.12.31	அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2015.07.20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் அதற்கான

				திருத்தங்கள்
28	28/2022	2022.12.17	சேவைமூப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பில்லாத வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு கலாநிதி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு சம்பளமற்ற லீவு வழங்குதல்	தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 15:1:1 ஆம் உப பிரிவு
29	29/2022	2022.12.17	தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 30 ஆம் பிரிவை திருத்தியமைத்தல்	தாபனவிதிக் கோவையின் 1 ஆம் தொகுதியின் XIV ஆம் அத்தியாயத்தின் 30 ஆம் பிரிவு
30	30/2022	2022.12.16	2023 ஆம் ஆண்டு - கடமைச்	-
31	31/2022	2022.12.30	அரசாங்க அலுவலர்களுக்கான விஷேட முற்பணம் – 2023 ஆம் ஆண்டு	2015.12.29 ஆம் திகதிய 26/2015 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை

திருத்தப்பட்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை

	சுற்றறிக்கை இலக்கம்	வெளியிடப்பட்ட திகதி	விடயம்	குறிப்பு
01	35/92(VI)	2022.12.02	அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகளைத் துரிதப்படுத்தல் தாபன விதிக் கோவையில் திருத்தம்	1995.06.26 ஆம் திகதிய 35/92(II) ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் 1997.11.13 ஆம் திகதிய 35/92(IV) ஆம்
	சுற்றறிக்கை இலக்கம்	வெளியிடப்பட்ட திகதி	விடயம்	குறிப்பு

02	10/2015(IV)	2022.01.19	இலங்கை நிர்வாக சேவையின் தரம் II இற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல்	2016.06.14 ஆம் திகதிய 10/2015(III) ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் அதற்கான திருத்தியமைக்கப்பட்ட 2015.04.27 ஆம் திகதிய 10/2015 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச்
03	03/2016(IV)	2022.01.05	அரச சேவையின் சம்பள திருத்தம் – 2016	2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் அதற்கான திருத்தங்கள் வெளியிடப்பட்ட 2016.07.01 ஆம் திகதிய 03/2016(I) ஆம் இலக்க அரசாங்க
04	22/2016(I)	2022.01.10	2006.03.01 ஆந் திகதி முதல் 2007.07.01 ஆந் திகதி வரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் III ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்வதற்கான சலுகை வழங்குதல்	2016.09.05 ஆம் திகதிய 22/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
	சுற்றறிக்கை	**வெளியிடப்பட்ட**	**விடயம்**	**குறிப்பு**

05	03/2019(III)	2022.02.08	தாபனவிதிக் கோவையின் தொகுதி II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 19:5 ஆம் பிரிவின் கீழான ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல்	தாபனவிதிக் கோவையின் தொகுதி II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 19:5 உப பிரிவு, 2019.02.20 ஆம் திகதிய 03/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை, 2019.12.09 ஆம் திகதிய 03/2019(I) ஆம் இலக்க
06	03/2019(IV)	2022.12.02	தாபனவிதிக் கோவையின் தொகுதி II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் உப பிரிவு 19:5 இன் கீழான ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியல்	2019.02.20 ஆம் திகதிய 03/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை, 2019.12.09 ஆம் திகதிய 03/2019(I) ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை, 2021.02.16 03/2019(II) ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் 2022.02.08 ஆம் திகதிய 03/2019(III) அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை

07	31/2019(I)	2022.11.03	இலங்கை நிருவாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் இலக்கம்: 2137/5 மற்றும் 2019.08.19 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் உள்ளடக்கப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்	2019.10.07 ஆம் திகதிய 31/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பந்தி 2.3 (அ)

	சுற்றறிக்கை இலக்கம்	வெளியிடப்பட்ட	விடயம்	குறிப்பு
08	33/2019(I)	2022.11.21	இலங்கை கணக்காளர் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பில் இல. 2137/66 மற்றும் 2019.08.22 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் உள்ளடக்கப்பட்ட திருத்தங்களை அமுல்படுத்துதல்	2019.11.08 ஆம் திகதிய 33/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பந்தி 2.3 (அ)
09	34/2019(I)	2022.11.09	இலங்கை திட்டமிடல் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பில் இல. 2137/26 மற்றும் 2019.08.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் உள்ளடக்கப்பட்ட திருத்தங்களை அமுல்படுத்துதல்	2019.11.21 ஆம் திகதிய 34/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பந்தி 2.3 (அ)
10	01/2020(I)	2022.11.14	இலங்கை விஞ்ஞான சேவையின் சேவை பிரமாணக் குறிப்பில் இல. 2137/89 மற்றும் 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் உள்ளடக்கப்பட்ட திருத்தங்களை	-

11	05/2020(I)	2022.11.14	இலங்கை கட்டிடக்கலைஞர் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பில் இல. 2137/88 மற்றும் 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் உள்ளடக்கப்பட்ட	-
12	18/2020(I)	2022.10.28	அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்	2020.10.06 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
	சுற்றறிக்கை இலக்கம்	**வெளியிடப்பட்ட**	**விடயம்**	**குறிப்பு**
13	02/2021(VII)	2022.08.29	COVID - 19 வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்க பின்பற்றிய வழிமுறைகளுடன் இணைந்த வகையில் 2020 மார்ச் 13 ஆம் திகதியின் பின்னர் அரசாங்க உத்தியோகத்தர்களி	-
14	14/2022(I)	2022.09.06	சேவை மூப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பில்லாத வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு/ வெளிநாட்டு சம்பளமற்ற லீவு வழங்குதல்	2022.06.22 ஆம் திகதிய 14/2022 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை

15	14/2022(II)	2022.09.15	சேவை மூப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பில்லாத வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டில் சம்பளமற்ற லீவு வழங்குதல்	2022.06.22 ஆம் திகதிய 14/2022 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
16	15/2022(I)	2022.08.03	அரச உத்தியோகத்தர்கள் ஒரு நாள் வீட்டிலிருந்து விவசாய மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்பளித்தல்	2022.06.15 ஆம் திகதிய 15/2022 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
17	16/2022(I)	2022.06.26	அரச அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை வரவழைப்பதை மட்டுப்படுத்துதல்	2022.06.17 ஆம் திகதிய 16/2022 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
18	16/2022(II)	2022.07.24	அரச அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை வரவழைப்பதை மட்டுப்படுத்துதல்	2022.06.15 ஆம் திகதிய சுற்றறிக்கை 15/2022, 2022.06.17 ஆம் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 16/2022 மற்றும் 2022.06.26 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 16/2022(I)

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக் கடிதங்கள்

	சுற்றறிக்கை கடித இலக்கம்	வெளியிடப்பட்ட திகதி	விடயம்	குறிப்பு
01	01/2022	2022.08.12	தாபனவிதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13:2, 21:2, 22:1:1 மற்றும் 14:12 உறுப்புரைகளில் திருத்தங்கள் செய்தல்	2019.09.30 ஆம் திகதிய 30/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
02	02/2022	2022.08.29	அரசாங்க நிறுவனங்களுக்கு பொதுமக்களிடமிருந்து வரும் கடிதங்கள், மின்னஞ்சல்கள் (E-mail) மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளித்தல்	1997.11.27 ஆம் திகதிய 23/97 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை, 2015.05.20 ஆம் திகதிய 11/2015 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் 2016.12.20 ஆம் திகதிய 25/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
03	03/2022	2022.09.23	அரச வருமானங்களை மதிப்பீடு செய்தல், சேகரித்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் தொடர்பான வழிகாட்டுதல்கள் (அரச கட்டிடங்கள் மற்றும் வீடுகளின் வாடகை - 20.02.01.01)	2021.10.06 ஆம் திகதிய 20/2021 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை

04	04/2022	2022.09.27	அரச உத்தியோகத்தர்களினால் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை தெரிவித்தல்	2015.01.29 ஆம் திகதிய 04/2015 அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை, 2019.02.27 ஆம் திகதிய 06/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை, தாபனவிதிக் கோவையின் I ஆம் தொகுதியின் XXXI ஆம் அத்தியாயத்தின் 3:2 ஆம் உப பிரிவு மற்றும் தாபனவிதிக் கோவையின் தொகுதி II இன் XLVII ஆம் அத்தியாயத்தின் 6 மற்றும் 7 பிரிவுகள் ஆம் இலக்க அரசாங்க நிருவாகச்
	சுற்றறிக்கை கடித இலக்கம்	**வெளியிடப்பட்ட திகதி**	**விடயம்**	**குறிப்பு**
05	05/2022	2022.09.27	அரச உத்தியோகத்தர்களின் உடை	2019.06.26 ஆம் திகதிய 13/2019(I) ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
06	06/2022	2022.12.28	அரச சேவை நிறுவனங்களின் அகற்றப்படும் கடதாசிகளை சேகரித்தல் மற்றும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தல்	2022.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரிவு

திறந்த ஆட்சேர்ப்பு

- பொறியியல் விஞ்ஞானமானி பட்டதாரிகள் இலங்கை பொறியியலாளர் சேவைக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய தகைமையை பரீட்சித்துப் பார்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை 2021.12.10 ஆந் திகதி நடாத்தப்பட்டுள்ளதோடு, நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப தற்சமயம் 71 உத்தியோகத்தர்கள் 2021.04.04 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இலங்கை பொறியியலாளர் சேவையின் III தரத்துக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளார்கள்.





விசேட தரத்திற்கு பதவியுயர்த்தல்

- இலங்கை பொறியியலாளர் சேவையின்Iஆந் தரத்தில் தகைமையுள்ள உத்தியோகத்தர்கள், அச் சேவையின் விசேட தரத்துக்கு பதவியுயர்த்துவதற்காக முறைசார்ந்த நேர்முகப் பரீட்சை 2021.11.01 ஆந் திகதி நடாத்தப்பட்டதுடன், நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப 03 உத்தியோகத்தர்களுக்கு 2022.01.01 ஆந் திகதி முதல் அமுல்நடாத்தப்படும் வகையில் இலங்கை பொறியியலாளர் சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளார்கள்.

- இலங்கை பொறியியலாளர் சேவையின் 2021.07.01 ஆந் திகதிக்கு காணப்படும் 04 விசேட தரத்துடைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடனசமர்ப்பிக்கப்பட்டுள்ளது.





தாபனப் பிரிவு

2022 ஆம் ஆண்டில் தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளும் அதன் முன்னேற்றங்களும் (2022.12.31 ஆந் திகதிக்கு)

அரச ஊழியர்கள் தொடர்பாகவும் அரச சேவையின் நல்இருப்பைப் உறுதிப்படுத்தும் வகையிலும் அதற்குரித்தான கொள்கைத் தொகுப்பினை மேற்கொள்ள அரசாங்கத்திற்கு உதவுவது தாபனப் பிரிவின் முக்கிய பணியாகும் என்பதால், அது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தும் போது தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக் கடிதங்கள் என்பன முக்கிய துணையாகக் கொள்ளப்படுகின்றன.

தாபன விதிக்கோவை

தாபன விதிக்கோவையில் திருத்த நடவடிக்கைகள்

2013 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியில் 2012 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் உள்ளடங்லாக 29 அத்தியாயங்களை உள்ளடக்கிய வகையில் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியை மீள திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை தாபன விதிக்கோவையின் சகல அத்தியாயங்களும் (அத்தியாயம் I தொடக்கம்V வரை தவிர) பரீட்சித்துப் பார்த்து திருத்தியமைக்கப்பட வேண்டிய பிரிவுகள் / உப பிரிவுகள் என அடையாளங் காணப்பட்டுள்ளதோடு, ஒருசில பிரிவுகள் / உப பிரிவுகள் தற்சமயம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் அவதானங்கள் / பரிந்துரைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் திருத்தியமைக்கப்பட வேண்டிய அத்தியாயம் / பிரிவுகள் / உப பிரிவுகளை திருத்தியமைப்பதற்காக குறித்த நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்வதற்கு தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வமைச்சுக்கள்/ திணைக்களங்களிலிருந்து அவதானங்கள் / பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் தாபன விதிக்கோவையில் திருத்த நடவடிக்கைகளை முழுமையாக நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் I ஆம் அத்தியாயத்திலிருந்து V ஆம் அத்தியாயம் வரையான விடயங்களுக்கு உரித்தான விடயப்பரப்பு 2009.04.02 ஆந் திகதி

முதல் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் அவ்விடயங்கள் தற்சமயம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்து கவனத்திற் கொண்டு அவசியப்படும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு தற்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் அனுப்பப்பட்டுள்ளது.

தாபன விதிக்கோவை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்தல்

- 2013 தாபன விதிக்கோவையை தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு அரசகரும மொழிகள் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற மென்பிரதியை அரச அச்சகத் திணைக்களத்திற்கு அச்சிடலிற்காக மீண்டும் அதன் சரிபார்ப்புக்களை பரீட்சிப்பதற்காக அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.
- 2013 தாபன விதிக்கோவையின் ஆங்கில மொழி மொழிபெயர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்காக இந்த அமைச்சின் மொழி பெயர்ப்புப் பிரிவிடம் வழங்கப்பட்டுள்ளது. அப்பிரிவிடமிருந்து ஆங்கில மொழியிலான மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட அத்தியாயங்கள் தற்சமயம் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, அந்த அத்தியாயங்களை மீள சரிபார்ப்புச் செய்யும் நடவடிக்கைகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்தல்

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் விடயப்பரப்பிற்குரிய தாபன நடவடிக்கைளுக்கு உரித்தான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, குறித்த அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


அதன்படி, 2022 ஆம் ஆண்டினுள் தாபனப் பிரிவின் மூலம் அமைச்சரவைக்கு 09 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இழப்பீட்டுக் குழுவினால் இழப்பீட்டுத் தொகையை அனுமதித்தல்

அரச பணியில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது, வேலை முடிந்து வீடு திரும்பும் போது, சேவை நிலையத்துக்குச் செல்லும் போது, கடமை நிமித்தம் வெளிச் செல்லும் போது அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு ஏற்படும் விபத்தொன்றின் போது இழப்பீட்டை வழங்குவதற்கான இயலுமை காணப்படுகின்றது. அது தொடர்பாக தீர்மானங்களை நான்கு பேரைக் கொண்ட இழப்பீட்டுக் குழுவினால் முடிவுகள் எடுக்கப்படும்.

குழுவின் பிரதிநிதித்துவம்	உண்மையான பதவி	பெயர்
தலைவர்	தாபனப் பணிப்பாளர் நாயகம்	திரு. ஷந்தன குமாரசிங்க
உறுப்பினர்	ஓய்வூதியப் பிரதி பணிப்பாளர்	திரு. ஓஷத குணதிலக
உறுப்பினர்	பிரதி பணிப்பாளர், அரச நிதித் திணைக்களம்	திருமதி. சீ.டீ. லியனகே
உறுப்பினர்	உதவிப் பணிப்பாளர் நாயகம் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	திருமதி. எஸ்.டீ. ஜயவீர

2022.12.31 ஆந் திகதி வரை அங்கீகரிக்கப்பட்டுள்ள இழப்பீட்டுக் கடிதக் கோப்புக்களின் எண்ணிக்கை மற்றும் இழப்பீட்டுப் பணத் தொகை தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. (முக்கிய காரணங்களின் அடிப்படையில் எடுக்கப்படும் குழுத் தீர்மானங்களுக்கு ஏற்ப செலுத்தப்படும் இழப்பீட்டுத் தொகை முக்கிய காரணிகளின் அடிப்படையில் திருத்தப்பட முடியும்.)



இழப்பீட்டுத் தரவுத் தளம்

அரச நிறுவனங்களின் தலைவர்களைப் போன்றே உத்தியோகத்தர்களுக்கும் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்குள்ள இயலுமையை விசாரத்து, இழப்பீட்டுத் தொகையைப் போரி அடிக்கடி தாபனப் பிரிவுக்கு கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. அந்த வகையில அடிக்கடி கிடைக்கப்பெறும் இழப்பீடு

தொடர்பான கோரிக்கைகள் குறித்த சகல விபரங்களும், அதனுடன் சம்பந்தப்பட்டு எடுக்கப்படும் பொதுவான முடிவுகளை உள்ளடக்கிய தரவு தளமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தரவுத் தளம், கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்பூட்டல் செய்வதற்கு நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பில் அரச உத்தியோகத்தர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம், Google படிவத்தின் மூலம் இணையத்தளத்தின் ஊடாக 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களில் 90 பேருக்கு 2022.03.23 மற்றும் 2022.03.24 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்டது.2022 ஆம் ஆண்டில் 03 பயிற்சித் திட்டங்களை நடாத்த எதிர்பார்க்கப்பட்டாலும், அப்போது நிலவிய சமூக நிலைமை காரணமாக நடாத்த முடியுமாக இருந்தது 2022.03.23 ஆந் திகதி மற்றும் 24 ஆந் திகதிகளிலாகும். அதில் ஒரு நிகழ்ச்சித்திட்டமாக காணப்பட்டதோடு 90 உத்தியோகத்தர்கள் பயிற்சி பெற்றார்கள். அதன் பின்னர், 2022.05.25 ஆந் திகதி தொடக்கம் பயிற்சித் திட்டங்கள் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைளை மனித வள அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதால், அது தொடர்பான நடவடிக்கைகள் அந்த பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவசியப்படும் சந்தர்ப்பங்களில் வளவாளர் பங்களிப்பினை தாபனப் பிரிவின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022.03.23 மற்றும் 2022.03.24 ஆந் திகதிகளில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்ட 90உத்தியோகத்தர்களில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் விரிவுரைகளில் பங்கேற்ற 68 உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள் தபால் மூலம் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



அவதானங்கள்

அவதானங்களும் பரிந்துரைகளும் வழங்குதல்

தாபனப் பிரிவு முக்கியமாக அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், சேவைப் பிரமாணங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கு விதிகள் தொடர்பான அவதானங்களையும் பரிந்துரைகளையும் வழங்குகின்றது.

தாபன பிரிவின் விடயத்துக்கு உரித்தாக கிடைக்கப்பெறும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்காக தயாரிக்கப்பட்ட அவதானங்களை பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அவற்றை ஆராய்வதற்காக அமைச்சரவைக்கு வழங்கப்படுகின்றது.

அவ்வாறே அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து அனுப்பப்படும் சேவைப் பிரமாணங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகளுக்கு உரித்தாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அவதானங்களையும் பரிந்துரைகளையும் சமர்ப்பிக்கும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. அவ்வாறே 2022 ஆம் ஆண்டினுள் தாபனப் பிரிவினால் வழங்கப்பட்ட அவதானங்களின் எண்ணிக்கை பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

அவதானமும் பரிந்துரையும் வழங்கப்பட்டுள்ள விடயங்கள்	அவதானங்கள் / பரிந்துரைகளின் எண்ணிக்கை
அமைச்சரவை விஞ்ஞாபனம்	177
சேவைப் பிரமாணம்	01
ஆட்சேர்ப்பு நடைமுறை	24

2016 ஆம் ஆண்டு இலக்கம் 12 இன் தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்தல்

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாபனப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல் கோரல்களுக்காக பதில்கள் பொது மக்களுக்கு உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டினுள் தகவலறியும் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை 87 ஆகும் என்பதோடு, அவற்றில் 77 கோரிக்கைகளுக்கான பதில்கள் 2022 ஆம் ஆண்டினுள் அனுப்பப்பட்டுள்ளது.

மாதம்	தகவல்களின் எண்ணிக்கை	தகவல் அளிக்கப்பட்ட முன்னேற்றம்
ஜனவரி	11	02
பெப்ரவரி	04	07
மார்ச்	08	05
ஏப்ரல்	06	11
மே	03	04
ஜூன்	05	09
ஜூலை	02	02
ஆகஸ்ட்	05	05
செப்டம்பர்	06	07
ஒக்டோபர்	08	03
நவம்பர்	12	13
திசெம்பர்	17	9
மொத்தம்	87	77

ஏனைய தாபன மற்றும் அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் தெளிவுபடுத்தல்கள்

கிடைக்கும் வினவல்களுக்கு ஏற்ப பதிலளிக்கப்படுவதோடு, இவ்வாறு அதிகளவில் வினவப்படுது தாபன விதிக்கோவையின் பிரிவுகள், அவ்வப்போது வெளியிடப்படும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை விடயங்கள் தொடர்பானவையாகும். இதன் போது எழுத்து மூலத்தைப் போன்றே வாய் மொழி மூலமாகவும் கோரப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

<u>உள்ளக கணக்காய்வுப் பிரிவு</u>

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின், பொது நிருவாகப் பிரிவுக்குரிய உள்ளக கணக்காய்வுப் பிரிவானது, நி.பி. 133 இன் பிரகாரம், அமைச்சின் செயலாளருக்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டிய பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் இயங்கி வருகின்றது. அக்கிளைத் தலைவர் உட்பட 12 பேர் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்களாகவும், ஒரு அலுவலக உதவியாளர் மற்றும் சாரதி ஒருவரையும் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினரைக் தன்னகத்தே கொண்டுள்ளது.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினதும், பொது நிருவாகப் பிரிவு மற்றும் அதன் கீழ் இயங்கும் ஓய்வூதியத்

திணைக்களம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், தொலைக் கல்வி நிலையம், அரசகரும மொழிகள் திணைக்களம், அரசகரும மொழி ஆணைக்குழு, மனித வள அபிவிருத்திக்கான தேசிய சபை, மொழிக் கற்கை மற்றும் பயிற்சிக்கான தேசிய நிறுவனம், பாராளுமன்ற விவகாரப் பிரிவு, அரசகரும மொழிப் பிரிவு மற்றும் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயற்திட்டங்களுக்கு உரித்தான உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பும், அதற்கு மேலதிகமாக தேவைப்பாட்டுக்கு ஏற்ப விசேட சோதனைகளும் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் விடயப் பரப்பினுள் உள்ளடக்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தல்.

- முதல் காலாண்டு - 2022.03.24
- இரண்டாம் காலாண்டு - 2022.06.29
- மூன்றாம் காலாண்டு - 2022.09.29
- நான்காவது காலாண்டு - 2022.12.28

கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்



வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகள் - 2022

2022.12.31 ஆந் திகதியில் வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வு வினவல்களின் விபரம்

அமைச்சு / திணைக்களம்	விடயம் (சுருக்கமாக)
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு- பொது நிருவாகப் பிரிவு	01) பொது நிருவாக அமைச்சின் பொது வைப்புக் கணக்கு தொடர்பான உள்ளக கணக்காய்வுச் சோதனை - 2022
	02) பொது நிருவாக அமைச்சின் தொலைபேசி விலைப் பட்டியல் தீர்ப்பிற்கான கணக்காய்வுச் சோதனை
	03) பொது நிருவாக அமைச்சின் வாகனங்கள் மற்றும் எரிபொருள் செலவுகள் முகாமைத்துவம் தொடர்பான உள்ளக கணக்காய்வுச் சோதனை - 2021
	04) பொது நிருவாக அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குதல் தொடர்பான உள்ளக கணக்காய்வுச் சோதனை - 2021
	05) பொது நிருவாக அமைச்சின் கொடுப்பனவு வவுசர்கள் தொடர்பான சோதனை - 2021 (ஜனவரி தொடக்கம் ஜூன் வரை)
	06) பொது நிருவாக அமைச்சின் குழு ரீதியான மற்றும் தனிப்பட்ட வாகனங்களின் அன்றாட ஓட்டக் குறிப்புகள் தொடர்பான உள்ளக கணக்காய்வுச் சோதனை - 2021
	07) பொது நிருவாக அமைச்சின் கொடுப்பனவு வவுசர்கள் தொடர்பான சோதனைகள் - 2021 (ஜூலை தொடக்கம் திசெம்பர் வரை)
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு- பொது நிருவாகப் பிரிவு	08) பொது நிருவாக அமைச்சின் உத்தியோகத்தர்களின் பிரத்தியேகக் கோவைப் பராமரிப்பு தொடர்பான உள்ளக கணக்காய்வுச் சோதனை - 2022
	09) பொது நிருவாக அமைச்சின் 2022.09.30 ஆந் திகதிக்கான செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றத்தின் சோதனை
